மதுரை அரசு ஹோமியோபதி மருத்துவக் கல்லூரி மருத்துவமனை தற்போது உள்ள இடம் மழைக்காலங்களில் தண்ணீர் சூழ்ந்து கட்டிடங்கள் இயங்க முடியாத காரணத்தால் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், வணிகவரி மற்றும் பதிவு துறை அமைச்சர் பி.மூர்த்தி ஆகியோர் தோப்பூர் பகுதியில் மாற்று இடம் தேர்வு செய்வதற்காக நேற்று (23.06.2023) நேரில் ஆய்வு மேற்கொண்டார்கள். உடன், மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.மா.சௌ.சங்கீதா, சட்டமன்ற உறுப்பினர்கள் கோ.தளபதி (மதுரை வடக்கு) ஆ.வெங்கடேசன் (சோழவந்தான்), துணை மேயர் தி.நாகராஜன் உட்பட பலர் உள்ளார்கள்.

தலைமைச் செயலகத்தில், நேற்று (23.6.2023) குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன், தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் சமுதாய வளர்ச்சி பிரிவிற்கு தமிழ்நாடு அரசு தேர்வாணையம் மூலம் சமுதாய அலுவலர் பணியிடத்திற்கு தேர்ந்தெடுக்கப்பட்ட 11 நபர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கினார். உடன், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை முதன்மைச் செயலாளர் செல்வி அபூர்வா, தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரிய மேலாண்மை இயக்குநர் முனைவர் பொ.சங்கர், ஆகியோர் உள்ளனர்.

திருவள்ளூர் மாவட்டம்

காக்களூர் ஆவின் பால் பண்ணையில் ஆய்வு!

அமைச்சர் மனோ தங்கராஜ் மேற்கொண்டார்!

திருவள்ளூர், ஜூன் 24;

திருவள்ளூர் மாவட்டம், காக்களூர் ஆவின் பால் பண்ணை வளாகத்தில் பால்வளத்துறை அமைச்சர் த.மனோ தங்கராஜ் ஆய்வு செய்து, பால்வளத்துறை மற்றும் இதர துறை அலுவலர்களுடன் கலந்தாலோசனை மேற்கொண்டு சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களுக்கு ஆலோசனைகள் மற்றும் அறிவுரைகள் வழங்கினார்.

அதனை தொடர்ந்து நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் பால்வளத்துறை அமைச்சர் மனோ தங்கராஜ் தெரிவித்ததாவது:

தற்போதைய சூழ்நிலையில் மார்க்கெட்டில் விற்பனையாகக் கூடிய பால்களில் மிகக் குறைந்த விலையில் தரமானதாக கொடுக்கப்படுவது ஆவின் பால் மட்டும்தான். இன்றைக்கு விவசாயப் பெருங்குடி மக்கள் பல்வேறு கோரிக்கைகளை வைத்துள்ளார்கள். அதில் முக்கியமான கோரிக்கை என்பது விவசாயிகள் பாலை சொசைட்டியில் கொடுக்கும்போதே அந்தப் பாலின் கொழுப்பின் அளவு மற்றும் புரத அளவு போன்றவற்றை அளவீடு செய்து அதற்கான விலையை அப்போதே நிர்ணயம் செய்து கொடுப்பது. இந்த நீண்ட நாள் கோரிக்கையை தற்பொழுது நிறைவேற்றப்பட்டுள்ளது. இதில் 40 சதவீத விவசாயிகளுக்கு கொடுக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள விவசாயிகளுக்கு கூடிய விரைவில் கொடுப்பதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருகிறது. இதனால் பாலின் கொள்முதல் அளவு மிக அதிக அளவிற்கு அதிகரித்துள்ளது. ஏப்ரல் மாதத்திற்குப் பிறகு மூன்று லட்சம் லிட்டருக்கும் அதிகமான பால் கொள்ளளவு வந்துள்ளது. பல்வேறு மாற்றங்கள் கொண்டுவரப்பட்டுள்ளது. உதாரணமாக, ஆவின் பணியாளர்கள் அனைவருக்கும் பயோமெட்ரிக் மூலமாக வருகை பதிவு செய்யும் முறை அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. இங்கு பணியாற்றுகின்ற ஒப்பந்த தொழிலாளர்களுக்கு PF, ESI பலன்கள் மற்றும் அவர்களின் சம்பளத்தை வங்கியில் செலுத்துவது போன்ற பல்வேறு நடவடிக்கைகள் எடுத்துள்ளோம். ஆவின் பொருள்களை சந்தையிடும் பணிகளில் 15% முதல் 20% வரை அதிகரித்துள்ளது. இவைகள் எல்லாம் ஒரு நல்ல முன்னேற்றத்திற்கான அறிகுறிகளாக உள்ளது.

இன்று திருவள்ளூர் மாவட்டம் காக்களூரில் அமைந்துள்ள ஆவின் பால் பண்ணையை நாங்கள் ஆய்வு செய்துள்ளோம். தற்போது எடுக்கப்பட்ட துரித நடவடிக்கையின் காரணமாக மின் சாதனம் பயன்பாடு 10 சதவீதம் குறைந்துள்ளது. வெகு விரைவில் ஆவின் வளாகம் ஒரு பசுமை வளாகமாக மாறும் என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது என பால்வளத் துறை அமைச்சர் தெரிவித்துள்ளார்.

அதனைத் தொடர்ந்து திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம், சுற்றுலா மாளிகை கூட்டரங்கில் இன்று பால்வளத் துறை அமைச்சர் தலைமையில்காஞ்சிபுரம்திருவள்ளூர் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கப் பிரதி நிதிகள் மற்றும் பால்வளத்துறை அலுவலர்களுடன் கலந்தாலோசனை கூட்டம் நடைபெற்றது.

இந்நிகழ்வுகளில், பூவிருந்தவல்லி சட்டமன்ற உறுப்பினர் ஆ.கிருஷ்ணசாமி, திருவள்ளூர்சட்டமன்ற உறுப்பினர்வி.ஜி.ராஜேந்திரன்,மாவட்ட வருவாய் அலுவலர் அசோகன், ஆவின் பொது மேலாளர் ஜி.ரமேஷ் குமார், துணைப் பதிவாளர் (பால்வளம்) திருமதி.சித்ரா, உதவி பொது மேலாளர் சொர்ணகுமார், உணவு பாதுகாப்புத் துறை நியமன அலுவலர் மரு.சந்திரபோஸ், முன்னோடி வங்கி மேலாளர் அருள்ராஜா, தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரிய உதவி பொறியாளர் ரகுகுமார், திருவள்ளூர் மேற்கு ஒன்றியச் செயலாளர் ஆர்.ஜெயசீலன், பொதுகுழு உறுப்பினர் த.எத்திராஜ், உள்ளாட்சிப் பிரதிநிதிகள், காஞ்சிபுரம் திருவள்ளூர் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கப் பிரதிநிதிகள், பால்வளத் துறை அலுவலர்கள் மற்றும் பல்வேறு துறை அரசு அலுவலர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

மாவட்ட செயலாளர் அமைச்சர் பி.கே.சேகர்பாபு, ஜோசப் சாமுவேல் எம்.எல்.ஏ. முன்னிலையில்

மாணவ, மாணவியருக்கு கல்வி உதவித்தொகை வழங்கும் விழா!

வழங்குபவர் : சி.வி.எம்.பி.எழிலரசன் எம்.எல்.ஏ. - தலைமை : டாக்டர் சாந்தகுமாரி எம்.சி.!

சென்னை, ஜூன் 24-

சென்னை கிழக்கு மாவட்டம், அம்பத்தூர் வடக்கு பகுதியில், மாவட்ட மருத்துவரணி சார்பில் கலைஞர்100, 8வது நிகழ்ச்சியாக "கல்வி உலகை புதிதாக்கும் - கலைஞர் கனவை நனவாக்கும் எனும் தலைப்பில் மாணவ, மாணவியருக்கு கல்வி உதவித்தொகை மற்றும் கல்வி உபகரணங்கள் வழங்கும் விழா 25.06.2023, ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணியளவில் சென்னை, அம்பத்தூர், திருமால் திருமண மண்டபத்தில் நடைபெறுகிறது.

இந்நலத்திட்டம் வழங்கும் விழா, சென்னை கிழக்கு மாவட்ட மருத்துவரணி அமைப்பாளரும், சென்னை மாநகராட்சி பொதுச்சுகாதாரம் நிலைக் குழுத்தலைவர் மருத்துவர். சாந்தகுமார் எம்.சி. தலைமை வகிக்கிறார். சென்னை கிழக்கு மாவட்ட கழக செயலாளரும், இந்து சமய அறநிலையத்துறை மற்றும் சென்னை பெருநகர வளர்ச்சிக் குழும அமைச்சர் பி.கே.சேகர்பாபு, அம்பத்தூர் சட்டமன்ற உறுப்பினரும், வடக்கு பகுதி செயலாளர் ஜோசப் சாமுவேல், தலைமை செயற்குழு உறுப்பினர் பி.கே.மூர்த்தி எம்.சி., அம்பத்தூர் தெற்கு கிழக்கு பகுதி செயலாளர்கள் டி.எஸ்.பி.ராஜகோபால், எம்.டி.ஆர். நாகராஜ் மற்றும் வி.ரமேஷ் (எ) நீலகண்டன், எல்.பி.எப்.மோகன், டாக்டர் ஏ.பி.பூர்ணிமா எம்.சி., ஜி.வி.நாகவள்ளி எம்.சி., ஜெ.பாலமுருகன் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

டாக்டர்.ஜி.பாலமுருகன், டாக்டர்.வெற்றிகுமார், டாக்டர்.எம்.ஜெ.திவ்யானந்தன், டாக்டர்.ஜி.பாலமுருகன், டாக்டர்.பெ.வெற்றிகுமார், டாக்டர்.எம்.ஜெ.திவ்யானந்தன், டாக்டர்.எ.வினிஷ், டாக்டர்.இ.வினோதினி, டாக்டர்.வி.சுதர்சன், டாக்டர் பெ.பூபாலன், டாக்டர்.வி.ஜி.சந்தோஷ்ராஜ் ஆகியோர் வரவேற்று பேசுகின்றனர்.

இவ்விழாவில் கழக மாணவர் அணிச் செயலாளர் சி.வி.எம்பி.எழிலரசன், எம்.எல்.ஏ., மாணவ, மாணவியருக்கு கல்விஉதவித் தொகை மற்றும் கல்வி உபகரணங்கள் வழங்கி சிறப்பிக்கின்றார்.

மேலும் இவ்விழாவில் சென்னை மாநகர் மேயர் பிரியாராஜன், ப.ரங்கநாதன் Ex.MLA., கே.எஸ்.ரவிச்சந்திரன், கே.சந்துரு, கே.எல்.எம்.நாதன், எம்.விஜயகுமார் ஆகியோர் பங்கேற்று சிறப்பிக்கின்றனர்.

இவ்விழாவில் 81வது வட்டக் கழக செயலாளர் மு.ரகு நன்றி கூறுகிறார்.

நமது பூவுலகம் எதிர்கொள்ளும் பெரும் அச்சுறுத்தலை அகற்ற

ஒருமுறை பயன்படுத்தும் பிளாஸ்டிக்கை தவிர்ப்போம்!

தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரியம் செய்தி வெளியீடு!

சென்னை, ஜூன் 24-

தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் வெளியிட்டுள்ள செய்தி வருமாறு:-

தமிழக அரசின் சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறை, தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்துடன் (TNPCB) இணைந்து, ஒருமுறை மட்டும் பயன்படுத்தும் பிளாஸ்டிக் பொருட்களுக்கு விதித்த தடையினை கடந்த 2019-இல் இருந்து செயல்படுத்தி வருகின்றது.

அதன் அடிப்படையில் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அதிகாரிகளை கொண்டு மாவட்ட வாரியாக ஒருமுறை மட்டும் பயன்படுத்தும் பிளாஸ்டிக் பொருட்களுக்கு எதிரான தொடர் சோதனைகள் மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை நடத்தி வருகின்றது.

அதன் தொடர்ச்சியாக 06.06.2013 அன்று தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரிய அரங்கத்தில் நடைபெற்ற உலக சுகாதார தின விழாவில் சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் "மீண்டும் மஞ்சப்பை இணையதளம்" மற்றும் "மீண்டும் மஞ்சப்பை செயலியானது அனைவரும் பயன்படுத்தும் வண்ணம் தமிழ் மற்றும் ஆங்கில உருவில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

இந்த மஞ்சப்பை இணையதளம், பொதுமக்களுக்கு ஒன்றிய மற்றும் மாநில அரசால் தடைசெய்யப்பட்ட ஒருமுறை பயன்படுத்தும் பிளாஸ்டிக் பொருட்களின் விவரங்கள், தடைசெய்யப்பட்ட ஒருமுறை பயன்படுத்தும் பிளாஸ்டிக் பொருட்களின் தீமைகள் குறித்து நடத்தப்பட்ட விழிப்புணர்வு பிரச்சார விவரங்களை அறிந்து கொள்ள உதவுகிறது.

தமிழ்நாடு முழுவதும் தடைசெய்யப்பட்ட ஒருமுறை பயன்படுத்தும் பிளாஸ்டிக் பயன்பாட்டை தடுக்க அதிகாரிகள் மேற்கொண்ட மாவட்ட வாரியான அமலாக்க விவரங்கள், பல்வேறு சுற்றுச்சூழலுக்கு உகந்த பொருட்களின் உற்பத்தியாளர்கள் மற்றும் மாவட்ட வாரியாக வகைப்படுத்தப்பட்ட பிளாஸ்டிக் கழிவுகளை மறுசுழற்சி செய்பவர்களின் விவரங்கள் இந்த இணையதளத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

மஞ்சப்பை விற்பனை இயந்திரம் மற்றும் பிளாஸ்டிக் பாட்டில் நசுக்கும் இயந்திரங்கள் அமைந்துள்ள இடங்கள் மாவட்ட வாரியாக இணையதளத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது. இந்த இணையதளம் சமீபத்திய சர்வதேச, தேசிய மற்றும் மாநில செய்திகள் மற்றும் வெளியீடுகளை வழங்கும்.

இதேபோல், மஞ்சப்பை செயலி, தடைசெய்யப்பட்ட ஒருமுறை பயன்படுத்தும் பிளாஸ்டிக் பொருட்கள் மற்றும் சுற்றுச்சூழலுக்கு உகந்த பொருட்களுக்கான விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கத்துடன் வடிவமைக்கப்பட்டுள்ளது.

மஞ்சப்பை செயலியின் முக்கிய அம்சங்கள்:

கூகுள் வரைபடத்தின் மூலம் மஞ்சப்பை விற்பனை இயந்திரம் மற்றும் பிளாஸ்டிக் பாட்டில் நசுக்கும் இயந்திரம் இருக்கும் இடத்தை அறிந்து கொள்ள பயன்படுகிறது.

சுற்றுச்சூழலுக்கு உகந்த பொருட்களை உற்பத்தி செய்பவர்களின் விவரங்களை அறிந்து கொள்ள மற்றும் பதிவு செய்ய பயன்படுகிறது. தடைசெய்யப்பட்ட ஒருமுறை பயன்படுத்தும் பிளாஸ்டிக் பொருட்களை பயன்படுத்துவோர்க்கு எதிராக புகார்களை பதிவு செய்ய பயன்படுகிறது.

ஒருமுறை பயன்படுத்தும் பிளாஸ்டிக் தடை தொடர்பான உங்கள் காணொளிகளை பதிவேற்ற உதவுகிறது. தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தின் நடைபெற உள்ள நிகழ்வுகள் மற்றும் அறிவிப்புகளை அறிய உதவுகிறது.

மேலும் தெரிந்து கொள்ள www.tnpcbmeendummanjappai.com மூலம் உள்நுழையவும் மேலும் அறிந்துகொள்ள, "மீண்டும் மஞ்சப்பை" செயலியினை Play Storeலிருந்து பதிவிறக்கவும் செய்து கொள்ளலாம்.

எனவே, நமது பூவுலகம் எதிர்கொள்ளும் பெரும் அச்சுறுத்தலை அகற்றுவதற்கு பொறுப்புள்ள குடிமகனாக, "ஒருமுறை பயன்படுத்தும் பிளாஸ்டிக்கை தவிர்ப்போம்" மற்றும் "சுற்றுச்சூழலுக்கு உகந்த மாற்றுகளை பயன்படுத்துவோம்" என உறுதிமொழி மேற்கொள்வதோடு, அதை உறுதியுடன் பின்பற்றுவோம்.

இவ்வாறு மாசு கட்டுப்பாட்டு வாரியம் தெரிவித்துள்ளது.

கலைஞர் நூற்றாண்டு விழா!

சென்னையில் 100 இடங்களில் சிறப்பு மருத்துவ முகாம்!

மாநகராட்சி அறிவிப்பு!

சென்னை, ஜூன் 24-

முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு, பெருநகர சென்னை மாநகராட்சிக் குட்பட்ட பகுதிகளில் 100 இடங்களில் கலைஞர் நூற்றாண்டு மெகா சிறப்பு மருத்துவ முகாம்கள் இன்று (24.06.2023) நடைபெற உள்ளது. பொதுமக்கள் இந்த முகாம்களில் கலந்து கொண்டு பயனடையுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறையின் சார்பில் தமிழ்நாடு முழுவதும் 100 இடங்களில் கலைஞர் நூற்றாண்டு மெகா சிறப்பு மருத்துவ முகாம்கள் இன்று (24.6.2023) நடத்தப்பட திட்டமிடப்பட்டுள்ளது. இவற்றில் பெருநகர சென்னை மாநகராட்சிக் குட்பட்ட பகுதிகளில் 10 இடங்களில் இந்த முகாம்கள் நடத்தப்பட உள்ளன. இந்த மெகா சிறப்பு மருத்துவ முகாம்கள் காலை 8 மணி முதல் மாலை 5 மணி வரை நடைபெறும்.

இந்த மருத்துவ முகாம்களில் பொதுமக்கள் பயன் பெறும் வகையில், சிறப்பு மருத்துவர்கள் மூலமாக பொது மருத்துவம், பொது அறுவை சிகிச்சை, மகளிர் மருத்துவம், கண் மருத்துவம், காது, மூக்கு, தொண்டை மருத்துவம், பல் மருத்துவம், எலும்பியல் மருத்துவம், மனநல மருத்துவ ஆலோசனை, சித்த மருத்துவம், ஆயுர்வேத மருத்துவம் போன்ற துறைகளில் இலவச சிகிச்சை ஆலோசனைகளும், இரத்த அழுத்தப் பரிசோதனை, சிறுநீரக பரிசோதனை, எக்கோ, இ.சி.ஜி., முழு இரத்த பரிசோதனை, தொழுநோய் கண்டறியும் பரிசோதனை, காசநோய் பரிசோதனை, கருப்பைவாய் புற்றுநோய் கண்டறியும் பரிசோதனை போன்ற மருத்துவ பரிசோதனைகளும் இலவசமாக வழங்கப்பட உள்ளது.

மேலும், இந்த முகாம்களில் தமிழ்நாடு அரசின் முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டம் மற்றும் பிரதம மந்திரி மக்கள் ஆரோக்ய திட்டத்தின் கீழ் புதிய பயனாளிகளும் பதிவு செய்யப்பட உள்ளனர். பெருநகர சென்னை மாநகராட்சிக் குட்பட்ட பகுதிகளில் நடைபெறும் மருத்துவ முகாம்களில் அரசு மற்றும் தனியார் மருத்துவமனைகளும் பங்குபெற உள்ளன.

பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் முகாம்கள் நடைபெறும் இடங்கள் :

திருவொற்றியூர் மண்டலம், 2 வார்டு, முகாம் நடைபெறும் இடங்கள் சென்னை நடுநிலைப்பள்ளி, கத்திவாக்கம் பிரதான சாலை, கத்திவாக்கம், எண்ணூர், சென்னை57.

மணலி மண்டலம், 32 வார்டு, முகாம் நடைபெறும் இடங்கள் கல்கி மான் போர்டு பள்ளி, 4ஆவது தெரு, சிங்கார வேலன் நகர், புத்தாகரம், சென்னை66.

தண்டையார்பேட்டை மண்டலம், 39 வார்டு, முகாம் நடைபெறும் இடங்கள் சென்னை மேல்நிலைப் பள்ளி, 731, தண்டையார் பேட்டை பிரதான சாலை, புதுவண்ணாரப்பேட்டை, சென்னை21.

இராயபுரம் மண்டலம், 50 வார்டு, முகாம் நடைபெறும் இடங்கள் சி.எஸ்.ஐ. நார்த்விக் அரசு மேல்நிலைப்பள்ளி, 20/45 ஷேக் மேஸ்திரி சாலை, இராயபுரம், சென்னை13.

அம்பத்தூர் மண்டலம், 86 வார்டு, முகாம் நடைபெறும் இடங்கள் வெங்கடேஸ்வரா மெட்ரிகுலேஷன் பள்ளி, அத்திப்பட்டு, சென்னை58.

அண்ணாநகர் மண்டலம், 94 வார்டு, முகாம் நடைபெறும் இடங்கள் சென்னை நடுநிலைப்பள்ளி, சிவன் கோயில் தெரு, வில்லிவாக்கம், சென்னை49.

கோடம்பாக்கம் மண்டலம், 131 வார்டு, முகாம் நடைபெறும் இடங்கள் சென்னை நடுநிலைப் பள்ளி, புலியூர், ஆற்காடு சாலை, கோடம்பாக்கம்8

வளசரவாக்கம் மண்டலம், 144 வார்டு, முகாம் நடைபெறும் இடங்கள் அரசினர் மேல்நிலைப்பள்ளி, சன்னதி தெரு, மதுரவாயல், சென்னை95.

ஆலந்தூர் மண்டலம், 162 வார்டு, முகாம் நடைபெறும் இடங்கள் நிதி பள்ளி, பொன்னியம்மன் கோயில் தெரு, ஆலந்தூர், சென்னை16.

பெருங்குடி மண்டலம், 188 வார்டு, முகாம் நடைபெறும் இடங்கள் மாநகராட்சி நடுநிலைப்பள்ளி, பாலாஜி நகர், மயிலை, சென்னை4.

பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் மேற்குறிப்பிட்ட 10 இடங்களில் நாளை (24.06.2023) நடைபெற உள்ள கலைஞர் நூற்றாண்டு மெகா சிறப்பு மருத்துவ முகாம்களில் பொதுமக்கள் கலந்து கொண்டு பயனடையுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

இவ்வாறு சென்னை மாநகராட்சி அறிவித்துள்ளது.

சென்னை பத்திரிகையாளர் யூனியன் சார்பில்

மன அழுத்தம் குறித்த மருத்துவ முகாம்!

நாளை நடைபெறுகின்றது!

சென்னை,ஜூன் 24-

சென்னை பத்திரிகையாளர் யூனியன் (எம்.யு.ஜெ.) சார்பில் மன அழுத்தம் - இளம் வயதினர் தற்கொலை அதிகரிப்பது ஏன்? தீர்வு என்ன? என்பது குறித்து கலந்துரையாடல் கூட்டம் நாளை (25.6.2023- ஞாயிற்றுக்கிழமை) மாலை 5 மணிக்கு - சென்னை, ரிச்சி தெரு வில் உள்ள சங்க அலுவலகத்தில் நடைபெறுகின்றது.

இதில் மனநல மருத்துவர் அரவிந்தன் சிவக்குமார் கலந்து கொண்டு கலந்துரையாடுகிறார்.

நிகழ்ச்சிக்கு எம்.யூ.ஜெ. தலைவர் எல்.ஆர்.சங்கர் தலைமை வகிக்கிறார்.

தமிழ்நாடு வீட்டு வசதி வாரிய தலைவர் பூச்சி எஸ்.முருகன் அவர்கள் தலைமையில் வீட்டு வசதி வாரியக் கூட்டம் கோயம்பேடு வாரியத் தலைமை அலுவலகத்தில் நேற்று (23.06.2023) நடைபெற்றது. இதில் வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை முதன்மைச் செயலாளர் அபூர்வா, வீட்டு வசதி வாரியத்தின் மேலாண்மை இயக்குனர் சரவணவேல்ராஜ், சென்னை பெருநகர வளர்ச்சி குழும உறுப்பினர் செயலாளர் அன்சுல் மிஸ்ரா, நகர ஊரமைப்பு இயக்க துறை இயக்குநர் கணேசன், தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் மேலாண்மை இயக்குநர் பி.சங்கர், நிதித்துறை துணை செயலாளர் சிபி ஆதித்யா செந்தில் குமார், வாரிய நிதி ஆலோசகர் கோவிந்தராஜ், வாரிய செயலாளர் மற்றும் பணியாளர் அலுவலர் சரவணமூர்த்தி, தலைமை பொறியாளர்கள் கண்ணன், சரவணன், வீட்டு வசதி வாரிய தலைமை வருவாய் அலுவலர் புண்ணியகோடி, பெருநகர சென்னை மாநகராட்சி மாவட்ட வருவாய் அலுவலர் முகமது அஸ்லாம், மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி.ஃபர்கத் பேகம் உள்ளிட்ட அதிகாரிகள் கலந்துகொண்டனர்.

கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு திருப்போரூர் பேரூர் கழகம் சார்பில் பேரூர் செயலாளர்/திருப்போரூர் பேரூராட்சி மன்றத் தலைவர் மு.தேவராஜ் தலைமையில் மாபெரும் பொதுக்கூட்டம் நடைபெற்றது. தலைமை கழக பேச்சாளர் தூத்துக்குடி சரத்பாலா, சென்னை அரங்கநாதன், ஜி.சி.அன்புசெழியான், வீ.விஜயகுமார், எஸ்.அஸ்கர் அலி, ஆர்.பரசுராமன், டி.கே.பாலசுப்பிரமணியன் மற்றும் பலர் கலந்துகொண்டனர்.